**செய்தி வெளியீடு எண்: 640** **நாள்:10–11–2011**

## வேளாண்மைத் துறை

10.11.2011 அன்று வேளாண்மை ஆணையர் அலுவலகத்தில் அக்டோபர் மாத இறுதி வரையிலான அனைத்து வேளாண் பணிகள் குறித்த திட்ட முன்னேற்ற ஆய்வு கூட்டம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களுடன் நடைபெற்றது. இக்கூட்டத்தில் **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ்.தாமோதரன்** அவர்கள் கலந்துகொண்டார்கள். இக்கூட்டத்தின் போது வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் அவர்களும் வேளாண்மை ஆணையர் அவர்களும் உடன் இருந்தனர்.

இத்திட்டப் பணி ஆய்வில் உரையாற்றிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுதந்திர இந்திய வரலாற்றில் முதன்முறையாக மேட்டூர் அணை நடப்பாண்டில் இயல்பான தண்ணீர் திறந்துவிடப்படும் நாளான ஜுன் 12க்கு பதில் ஆறு நாட்கள் முன்னதாக, அதாவது ஜுன் 6ஆம் தேதியே திறக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டதால், நடப்பாண்டில், குறுவை சாகுபடிப் பரப்பு கடந்த ஆண்டைவிட 65000 எக்டர் பரப்பில் கூடுதலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் டெல்டா மாவட்ட விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு இடையே விளைவித்த குறுவை நெல் பயிர் வடகிழக்குப் பருவ மழைக்கு முன் அறுவடை முடிக்கப்பட்டது . இதனால் பெரும் மகசூல் இழப்பு முற்றிலும் தவிர்க்கப்பட்டு விவசாயிகள் பெரும் பயனடைந்துள்ளனர். மேலும் இதுவரை மாநில அளவில் அறுவடை மேற்கொண்ட பயிர் அறுவடைப் பரிசோதனைகளில் சராசரியாக ஹெக்டேருக்கு 6.5 டன் என்ற அளவிற்கு நெல் விளைச்சல் கிடைக்கப் பெற்றுள்ளது என மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். தமிழக வேளாண்மையில் பல்வேறு புதிய உத்திகளைப் புகுத்தி, மீண்டும் ஒரு பசுமைப் புரட்சியினை உருவாக்கி, வேளாண்மை உற்பத்தி தமிழகத்தில் உயர்ந்து, தமிழக விவசாயிகளின் வருமானம் இருமடங்காக்கிட அனைத்து அலுவலர்களும் முனைப்போடு செயல்படும்படி கேட்டுக்கொண்டார்.

மேலும், பாசன நீரைச் சிக்கனமாகவும், திறம்படவும் பயன்படுத்துவதற்காக நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்பாசன அமைப்புகளுக்கு முழு மான்யம் வழங்கப்பட்டுள்ளது எனவும் இதனால், அதிக விவசாயிகள் இந்த நவீன பாசன முறைகளைப் பின்பற்றி பயிர்களின் உற்பத்தி திறனை அதிகரித்திட வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

உணவு தானிய உற்பத்தியினை நடப்பாண்டில் 115 இலட்சம் மெ.டன் உயர்த்த வேண்டும் என திட்டமிட்டவாறு, பல்வேறு திட்டங்களுக்கு அரசின் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் நாடெங்கிலும் இரசாயன உரங்கள் மற்றும் இதர வேளாண் இடுபொருள்களின் விலை உயர்ந்துவரும் நிலையில், **தமிழக விவசாயிகளின் நிதிச் சுமையினைக் குறைக்கும் வகையில் இந்த வேளாண் இடுபொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல் வரியிலிருந்து விலக்கு அளித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

தமிழகத்திற்கான இரசாயன உரங்களின் தேவையினை கணித்து மத்திய அரசிடமிருந்து போதுமான அளவு இரசாயன உரங்கள் பெற்று அதனை சரியான விலைக்கு விவசாயிகளுக்கு கிடைப்பதனை இந்த அரசு உறுதி செய்துள்ளது. இவ்வாறு பெறப்பட்ட உரங்களை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் எவ்வித தட்டுப்பாடுமின்றி இரு நாட்களுக்குள் கிடைக்க அனைத்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களும் உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவு வழங்கினார்கள். உரம் தட்டுப்பாடு இன்றி அனைத்து பகுதிகளிலும் கிடைத்திட தினந்தோறும் உர இருப்பை கண்காணித்திட அறிவுரை வழங்கினார். மேலும் விவசாயிகளின் வயல்களில் மண் மாதிரி எடுத்து ஆய்வு மேற்கொண்டு அதன்படி உரமிட களப் பணியாளர்கள் விவசாயிகளுக்கு தவறாது பரிந்துரை வழங்குவதனை உறுதி செய்திடவும் கேட்டுக்கொண்டார். அவ்வாறாகவே தேவைக்கு அதிகமாக உரமிடுவதால் சாகுபடி செலவு உயர்வதோடு பூச்சி நோய் தாக்குதலும் ஏற்பட வாய்ப்பு அதிகம் உள்ளது என்ற செய்தியினையும் அனைத்து விவசாயிகளுக்கும் எடுத்து செல்ல கேட்டுக்கொண்டார்.

தற்போது நிலவும் வேளாண் தொழிலாளர்கள் தட்டுப்பாட்டினை சமாளித்து வேளாண் பணிகளை காலத்தே மேற்கொள்ள பல்வேறு பண்ணை இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் மானியமும் வழங்கப்படுகிறது. விவசாயிகளின் தேவைக்கேற்ப பண்ணை இயந்திரங்களை ஏற்பாடு செய்து வேளாண் பணிகள் காலதாமதமின்றி செவ்வனே மேற்கொள்ள துறை அலுவலர்கள் அனைவரும் நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கினார்.

வேளாண்மைத் துறையில் பணியாற்றும் அலுவலர்கள், கிராமங்களுக்குச் சென்று, விவசாயிகளைச் சந்தித்து புதிய தொழில் நுட்பச் செய்திகளைப் பரிமாற்றம் செய்ய, போதிய வாகன வசதி ஏதுமின்றி அடைந்து வந்த நீண்ட கால சிரமத்தினை உணர்ந்த **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கு மாதங்களுக்குள்ளாகவே ரூ.16.29 கோடி மதிப்பில் 213 புதிய வாகனங்கள் வாங்க ஆணை வழங்கினார்கள்.

அதன் முதல் கட்டமாக 100 புதிய வாகனங்கள் வாங்க ரூ.6.51 கோடி நிதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பினை பயன்படுத்தி வேளாண் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்குச் சென்று அடையும் வகையில் திறம்பட செயல்பட அறிவுறுத்தினார்கள்.

மேலும், வேளாண் விரிவாக்க பணியாளர்கள் அனைவரும் கிராமங்களுக்கு சென்று விவசாயிகளின் குறைகளை தீர்வு செய்திடவும் வயல்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு உடனடியாக தீர்வு காணவும் முனைப்போடு செயல்பட மீண்டும் வலியுறுத்தினார்கள்.

இவ்வாறாக தமிழக அரசு பல்வேறு வழிகளில் விவசாயிகளின் நலனிலும், துறை அலுவலர்களின் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது. அரசு எடுத்துவரும் முயற்சிகள் மூலம் விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களின் உற்பத்தி உயர்ந்து, வருமானம் இரட்டிப்பாக துறை அலுவலர்கள் எல்லோரும் அயராது உழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் இதர இடுபொருட்களை தேவையான அளவில் இருப்பு வைத்திடவும் அதன் தரத்தினை உறுதி செய்வதிலும் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

தற்போது, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் அதிக மழையினால், நெல் பயிரின் பரப்பில் சிறிது சேதம் ஏற்பட்டுள்ளது. மழை நீர் வடிந்தவுடன் பயிர் மீண்டும் செழித்து வளர, பரிந்துரைக்கப்பட்ட தொழில் நுட்பங்களை உடனடியாக, பாதிப்படைந்த விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமெனவும் நடப்பு நிதி ஆண்டிற்கான இலக்குகளை அடைந்து **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இரண்டாம் பசுமைப்புரட்சி** எனும் இலக்கினை நிறைவேற்றி சாதனை புரிந்திட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். தற்போது வடகிழக்குப் பருவ மழை மிகவும் சாதகமாக அமைந்துள்ளது. பெரும்பாலான நீர்த்தேக்கங்கள், ஏரிகள் மற்றும் குளங்கள் வெகு வேகமாக நிரம்பி வருகின்றன. இந்நிலையினை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, உணவு உற்பத்தினை பெருக்கி அதன் மூலம் விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக்க வேண்டும், அதன் மூலம் வேளாண்மைத் துறைக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையிலான அரசுக்கும், விவசாயிகளிடையே நற்பெயர் ஈட்டித்தர வேண்டும் என அனைத்து அலுவலர்களையும் மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொண்டார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**